பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 07 2026 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. நாடு முழுவதும் மின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யசோ நாயக் கூறியுள்ளார்.

3. நாடு முழுவதும் UPI செயலி வாயிலான பணப் பரிவர்த்தனைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு எரிவாயு மற்றும் உரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளிடையே வர்த்தகம், முதலீடு, சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஸ் கோயல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதுதில்லியில் அந்நாட்டு சுற்றுலாத்துறை அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை நடத்தியதாக சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையேயான பல்வேறு உத்திசார் பொருளாதார ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் மின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யசோ நாயக் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் அளித்துள்ள பதிலில், நாடு முழுவதும் 15 ஆயிரத்து 870 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 11 திட்டப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இவை தவிர 8 ஆயிரத்து 140 மெகாவாட் திறன் கொண்ட 6 திட்டங்களுக்கு மத்திய மின்சார ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் திரு. ஸ்ரீபத்நாயக் கூறியுள்ளார்.

<<<<>>>>

தேசிய தொழில்பழகுநர் ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலமாக அவர் அளித்துள்ள பதிலில், தமிழகத்தில் இத்திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ள இளைஞர்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் தொழில் பழகுநர் பயிற்சியை ஊக்குவிக்கும் நோக்கில் மத்திய அரசு கடந்த 2022-ம் ஆண்டு முதல் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

<<<<>>>>

பழம்பெருமை வாய்ந்த அரிய கலைப்பொருட்கள் வெளிநாடுகளுக்கு சட்ட விரோதமாக கடத்தப்படுவதை தடுக்க மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்துள்ள பதிலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து கடந்த 5 ஆண்டுகளில் 615 தொல்லியல் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதா அவர் கூறியுள்ளார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள், சுற்றுலாத் தலங்கள், அருங்காட்சியகங்கள் ஆகியவற்றில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதாக திரு. கஜேந்திர் சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் UPI செயலி வாயிலான பணப் பரிவர்த்தனைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் கடந்த நிதியாண்டில் UPI செயலி வாயிலாக 314 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

UPI செயலி அடிப்படையிலான பரிவர்த்தனைகளின் பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு எரிவாயு மற்றும் உரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

சென்னை பெருநகர மாநகராட்சியின் சார்பில் சேத்துப்பட்டில் செயல்பட்டு வரும் உயிரி எரிவாயு ஆலையை முதலமைச்சர் திரு. விஜய் நேற்று ஆய்வு செய்தார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளிலும் குப்பைகளை சேகரிக்கும் பணியை அறிவியல்பூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

சேகரிக்கப்படும் குப்பைகளை தார்ச்சாலை அமைப்பதற்கும், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திரு. விஜய் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இன்று முதல் அடுத்த மாதம் 5-ம் தேதி வரை 15 நாட்களுக்கு வினாடிக்கு 440 கன அடி வீதம் தண்ணீரி திறந்துவிடப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் மூலம் அமராவதி புதிய பாசனத்திற்கு உட்பட்ட 25 ஆயிரத்து 250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு, விமானப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்தும் திட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

தூத்துக்குடியில் இருந்து பாலக்காடு வரை செல்லும் பாலருவி விரைவு ரயிலில் நவீன பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று பயணியர் நலச்சங்க உறுப்பினர் திரு. பிரம்மநாயகம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte - Brammanayakam - 26 Sec)

இந்த ரயிலில் இணைக்கப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய ரயில் பெட்டிகள் சிறப்பான பயண அனுபவத்தை அளிப்பதாக உள்ளது என்று பயணி ஒருவர் தெரிவித்தார்.

(Voice Byte - Passenger - 24 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த 4 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக-கடலோர பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அடுத்த 4 தினங்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இயல்பைக் காட்டிலும் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகரைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே காஞ்சிபுரத்தில் நேற்று கனமழை காரணமாக வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவை குறிவைத்து யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளதாக மாஸ்கோ மேயர் Sergei Sobyanin தெரிவித்துள்ளார்.

-------------

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக கொள்கை மறு ஆய்வுக் கூட்டத்தில் மத்திய வர்த்தக துறை செயலர் திரு. ராஜேஷ் அகர்வால் தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் குழு பங்கேற்கிறது.

-------------

ஃபிரான்சில் 15 வயதுக்குட்பட்ட சிறார்கள், சமூக ஊடக வலைதளத்தைப் பயன்படுத்தவதற்கு தடை விதிப்பதற்கான சட்டம் இயற்றப்பட உள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

-------------

நடப்பாண்டிற்கான லோக்மான்ய திலக் தேசிய விருக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

-------------

சிக்கிம் மாநிலம் Namchi மாவட்டத்தில் சுரங்கக் கட்டுமானப் பணியின்போது ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணிகளில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

-------------

இந்தியாவில் உள்ள முக்கிய உற்பத்தி துறைகளில் வருடாந்திர வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக அதிகரித்துள்ளது.

-------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் 2 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் வழங்கினார்.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி வனப்பகுதியில் சரக்கு லாரியில் தீப்பற்றியதை அடுத்து, வனப்பகுதிக்குள் தீ பரவுவதைத் தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் ஆட்சியர் திருமதி பத்மஜா தலைமையில் நடைபெற்றது.

-------------

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் பெண்கள் பாதுகாப்பு, தீண்டாமை ஒழிப்பு, கல்வியின் முக்கியத்துவம் குறித்த பள்ளி மாணவ, மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்தி*

ஆசிய இளையோர் ஐவர் ஹாக்கிப் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

மஸ்கட்டில் நேற்று தொடங்கிய இப்போட்டியில் இந்திய மகளிர் அணி 8-3 என்ற கோல் கணக்கில் கஜகஸ்தான் அணியை வென்றது.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் 7-3 என்ற கோல் கணக்கில் இந்திய ஆடவர் அணி வெற்றி பெற்றது.

<<<<The End>>>>